# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 06.09.2019**

**விசாரணை நடைபெற்ற இடம்** **மாவட்ட ஆட்சியர் அலுவலகம்**
**நீலகிரி மாவட்டம் (இ) உதகமண்டலம்,.**

**முன்னிலை**

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 6209/A/2018**

Thiru R. Prabakaran
212, Chamber Building
Integrated Court Complex
Coimbatore - 18. . மேல்முறையீட்டாளர்

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர்
காவல் துணை ஆணையர்
(தலைமையிடம்),
மாநகர காவல் ஆணையர் அலுவலகம் பொது அதிகார அமைப்பு
கோவை மாநகர்
கோயமுத்தூர்.

## ஆணை

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (06.09.2019) நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இ) உதகமணடலத்தில் நடத்தப்பட்ட முகாம் விசாரணைக்கு மனுதாரர் Thiru R. Prabakaran வழக்கறிஞர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.

G.கிருஷ்ணமூர்த்தி, உதவி பொதுத் தகவல் அலுவலர் / காவல் உதவி ஆணையாளர், குற்றப்பதிவேட்டுக் கூடம், கோவை மாநகர், ஆஜரானார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் 16/07/2018 தேதியிட்ட மனுவில், கோயமுத்தூர் மாநகர போக்குவரத்து காவல் நிலையம் TIW East (கிழக்கு) முதல் தகவல் அறிக்கை எண்.335/2018 நாள் 04/06/2018 சம்பந்தமாக, முதல் தகவல் அறிக்கை, குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஓட்டுநர் உரிமம், டி என் 38 சிசி 9318 வாகன பதிவு சான்றிதழ், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம், குற்றஞ்சாட்டப்பட்டவரின் அதாவது ஜெய்பால் சிங் என்பவரின் முகவரி, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை போன்ற ஆவணங்களின் நகல்களை 1 முதல் 10 இனங்களில் வழங்கக் கேட்டு பொதுத் தகவல் அலுவலர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர், கோயமுத்தூர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். இதுகுறித்து பொதுத் தகவல் அலுவலர் மற்றும் காவல் துணை ஆணையர் (த), கோவை மாநகர் 28/07/2018 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மனுதாரர் கோரிய தகவல்கள் சம்பந்தமாக கோவை மாநகர கிழக்கு பகுதி போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலைய ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட பதிலறிக்கையை இணைத்து அனுப்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அந்த பதிலறிக்கையில், தமிழ்நாடு தகவல் ஆணையம் எண்.2402/மா.த.த.ஆ/2016 நாள் 30/07/2016-ன்படி வழக்கு சம்பந்தமான ஆவணங்களை வழக்கு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மட்டும் தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி வழங்கப்படும் என்றும், மூன்றாம் நபர்களுக்கு தகவல் வழங்க இயலாது என்றும் காவல் ஆய்வாளர், போக்குவரத்து புலனாய்வு பிரிவு கிழக்கு, கோவை மாநகர் அவர்கள் தெரிவித்துள்ளார். திருப்தியடையாத மனுதாரர் பிரிவு 19 (1).ன்கீழ் 01/08/2018 தேதியிட்டு முதல் மேல் முறையீட்டு மனுவை காவல் ஆணையாளர், கோயமுத்தூர் அவர்களுக்கு அனுப்பி, தான் கோரிய தகவல்கள் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், சட்டப்படி தவறான பதில் அளிக்கப்பட்டுள்ளது என்றும், தனது மனு யார் சார்பாகவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், தன்னால்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, சரியான தகவல்களை வழங்கக் கேட்டுள்ளார். அதுகுறித்து மேல் முறையீட்டு அலுவலர் மற்றும் காவல் ஆணையர், கோவை மாநகரம் 20/08/2018 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், கோவை மாநகர கிழக்கு பகுதி போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளரின் பதிலறிக்கை போக்குவரத்து காவல் துணை ஆணையாளரால் சரிபார்க்கப்பட்டு மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். அந்த பதிலறிக்கையில், மனுதாரர் இந்த வழக்கின் புகார்தாரராகவும் இல்லை, எதிர்மனுதாரராகவும் இல்லை என்றும், மனுதாரருக்கு இந்த வழக்கில் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றும், எனவே தகவல்களை வழங்க இயலாது என்றும் பதிலளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர் பிரிவு 19 (3)-ன்கீழ் 25/08/2018 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையிட்டு மனு ஒன்றை ஆணையத்திற்கு அனுப்பி, தான் கோரிய தகவல்கள் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், சட்டப்படி தவறான பதில் அளிக்கப்பட்டுள்ளது என்றும், பிரிவு 4-ன்படி தான் கோரிய தகவல்கள் பொது அதிகார அமைப்பால் வகைப்படுத்தி, வரிசைப்படுத்தி வைக்கப்படவேண்டிய தகவல்கள் என்றும் தெரிவித்து, தான் கோரிய தகவல்களைத் தனக்குப் பெற்றுத் தருமாறும், உரிய தகவல்கள் தராத பொது அதிகார அமைப்பினர்மீது அபராதம் விதிக்குமாறும் கேட்டுள்ளார்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனது 16/07/2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவில் தான் கோரிய தகவல்கள் தனக்கு நாளதுவரையில் வழங்கப்படவில்லை என்றும், சட்டப்படி தவறான பதில் அளிக்கப்பட்டுள்ளது என்றும், தனது மனு யார் சார்பாகவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், தன்னால்தான் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றும், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி ஒரு இந்திய குடிமகன் எந்தத் தகவலையும், யாருடைய தகவலையும் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும் என்றும், தகவல் கோருவதற்கான காரணங்களைத் தெரிவிக்க வேண்டியதில்லை என்றும், தான் கோரிய தகவல்களை அளிக்காமல் தவறான பதில்களை பொது அதிகார அமைப்பினர் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்து, தான் கோரியவற்றிற்கான சரியான தகவல்களைத் தனக்குப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜராக வேண்டிய பொதுத் தகவல் அலுவலர் / காவல் துணை ஆணையாளர், தலைமையிடம், கோவை மாநகர், பாதுகாப்பு பணியில் பணி மேற்கொள்வதால், தன்னால் 06/09/2019 தேதியிட்ட விசாரணைக்கு ஆஜராக இயலாத நிலை உள்ளதாகத் தெரிவித்து, அவர் சார்பாக திரு. G. கிருஷ்ணமூர்த்தி, உதவி பொதுத் தகவல் அலவலர் மற்றும் காவல் உதவி ஆணையாளர், குற்றப்பதிவேட்டுக் கூடம், கோவை மாநகர் என்பவர் ஆஜரானார்.

5. விசாரணைக்கு ஆஜரான உதவி பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் 16/07/2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு குறித்து 28/07/2018 தேதியிட்டும், 20/08/2018 தேதியிட்ட கடிதத்தின்படியும் உரிய தகவல்கள் மனுதாரருக்கு இணைத்து அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

6. மனுதாரர் 16/07/2018 தேதியிட்ட மனுவில், கோயமுத்தூர் மாநகர போக்குவரத்து காவல் நிலையம் TIW East (கிழக்கு) முதல் தகவல் அறிக்கை எண்.335/2018 நாள் 04/06/2018 சம்பந்தமாக, முதல் தகவல் அறிக்கை, குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஓட்டுநர் உரிமம், டி என் 38 சிசி 9318 வாகன பதிவு சான்றிதழ், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம், குற்றஞ்சாட்டப்பட்டவரின் அதாவது ஜெய்பால் சிங் என்பவரின் முகவரி, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை போன்ற ஆவணங்களின் நகல்களை 1 முதல் 10 இனங்களில் வழங்கக் கேட்டு பொதுத் தகவல் அலுவலர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர், கோயமுத்தூர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார் என்பதைக் காண முடிகிறது. இதுகுறித்து பொதுத் தகவல் அலுவலர் மற்றும் காவல் துணை ஆணையர் (த), கோவை மாநகர் 28/07/2018 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பியுள்ள கடிதத்துடன் இணைத்து அனுப்பியுள்ள கோவை மாநகர கிழக்கு பகுதி போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலைய ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட பதிலறிக்கையில், தமிழ்நாடு தகவல் ஆணையம் எண்.2402/மா.த.த.ஆ/2016 நாள் 30/07/2016-ன்படி வழக்கு சம்பந்தமான ஆவணங்களை வழக்கு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மட்டும் தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி வழங்கப்படும் என்றும், மூன்றாம் நபர்களுக்கு தகவல் வழங்க இயலாது என்றும் காவல் ஆய்வாளர், போக்குவரத்து புலனாய்வு பிரிவு கிழக்கு, கோவை மாநகர் அவர்கள் தெரிவித்துள்ளார் என்பதையும் காண முடிகிறது. இதுகுறித்து மனுதாரர் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவிற்கும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

7. மேற்சொன்ன மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தகவல்களைப் பார்வையிடுகையில், 16/07/2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவில் அவர் கோரியுள்ள தகவல்களுக்கு 28/07/2018 மற்றும் 20/08/2018 ஆகிய தேதிகளிட்டு பொது அதிகார அமைப்பால் அளிக்கப்பட்டுள்ள பதில்கள் / தகவல்கள் சட்டப்படி சரியானதே என்று ஆணையம் ஏற்றுக்கொள்கிறது. மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள கோயமுத்தூர் மாநகர போக்குவரத்து காவல் நிலையம் TIW East (கிழக்கு) முதல் தகவல் அறிக்கை எண்.335/2018 நாள் 04/06/2018 வழக்கில் இந்த மனுதாரர் திரு. R. பிரபாகரன் அவர்கள் புகார்தாரராகவும் இல்லை, எதிர்மனுதாரராகவும் இல்லை என்றும், மனுதாரருக்கு இந்த வழக்கில் எந்தவிதமான

தொடர்பும் இல்லை என்பதை விசாரணையின்மூலம் நன்கு அறிய முடிகிறது. விபத்தில் பாதிக்கப்பட்டவருக்காக இந்த தகவல்களைக் கேட்பதாக இருந்தாலும், மனுதாரர் அது குறித்து அவருடைய மனுவில் எந்தவிதமான விபரங்களையும் குறிப்பிடவில்லை. மேலும், பொதுத் தகவல் அலுவலரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இவ்வாணையத்தால் ஆணை எண்.2402/மா.த.த.ஆ/2016 நாள் 30/07/2016 என்ற வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணை W.P.30022/2013 ஐ மேற்கோள்காட்டி அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பு இவ்வழக்கிற்கும் பொருந்தும் என்று ஆணையம் கருதுகிறது. **எனவே, பொது அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டுள்ள நிலைப்பாடு மற்றும் அளிக்கப்பட்டுள்ள பதில்கள் சட்டப்படி சரியானவையே என்று முடிவு செய்யப்படுகிறது. இந்நிலையில், இவ்வழக்கில் மேலும் விசாரிக்க ஏதுமில்லை என்று கருதி, இவ்வழக்கு விசாரணையை ஆணையம் இத்துடன் முடித்துக்கொள்கிறது.**

**ஒம்/- (இரா. தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6209/A/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்
காவல் துணை ஆணையர்
(தலைமையிடம்),
மாநகர காவல் ஆணையர் அலுவலகம்
கோவை மாநகர்
கோயமுத்தூர்.

**<u>மனுதாரர்</u>**

Thiru R. Prabakaran
212, Chamber Building
Integrated Court Complex
Coimbatore - 18.

*RS/PS 10.09.2019*